**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆண்டு விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 12 ம் நாள்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் நாள் வியாழக்கிழமை

**இடைக்கால மனு எண்.13/2025**

**in**

**அசல் வழக்கு எண்.128/2018**

1. கணேஷகவுண்டர்

2. G. மாரிசாமி ... **மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள்**

//எதிர்//

1. A. ராமசாமி ... **எதிர்மனுதாரர் / வாதி**

2. பாலசுப்பிரமணியம்

3. லோகேஷ்குமார்

4. கௌதம்

5. பரிமளம்

6. V.R. ரவிச்சந்திரா

7. C. அண்ணாமலை

...**எதிர்மனுதாரர்கள்/ 3 முதல் 8 பிரதிவாதிகள்**

8. நடராஜன்

9. செல்வராஜ்

10. A. சித்ரா

11. K. மாராத்தாள்

12. M. கமலாத்தாள்

13. G. திருமூர்த்தி

14. G. கோபால்

15. S. செல்வி

16. P. ஞானபிரகாஷ்

17. N. கருப்பாத்தாள்

18. K. கருப்புசாமி

19. M. சின்னசாமி ... **எதிர்மனுதாரர்கள்/கட்சி சேர்க்கப்பட வேண்டியவர்கள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ரவீந்திரன், அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.D.சித்ரா, அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சிவக்குமார், அவர்கள் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யவில்லை என்று கூறியும், 6 முதல் 17 எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாகியும், 18 மற்றும் 19 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சுப்பிரமணி, அவர்கள் ஆஜராகியும் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்று கூறியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151-ன் கீழ் எதிர்மனுதாரர்கள்/கட்சிசேர்க்கப்பட வேண்டியவர்களை அசல் வழக்கில் 9 முதல் 20 பிரதிவாதிகளாக அவசிய தரப்பினர்களாக சேர்க்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:

1.1). 1ம் எதிர்மனுதாரர்/வாதி காலஞ்சென்ற நஞ்சப்பகவுண்டரின் சட்டப்பூர்வ வாரிசுகளிடமிருந்து, மனுவில் பட்டியலிடப்பட்டுள்ள 14.09.2000

தேதியிட்ட இரண்டு விற்பனைப் பத்திரங்களின் மூலம் வழக்குச் சொத்தின் ஒரு பகுதியை வாங்கியுள்ளார். மேற்கூறிய சட்டப்பூர்வ வாரிசுகள், தங்களுக்கு உரிமையானதை விட அதிக அளவில் சொத்துக்களை வேண்டுமென்றே விற்றுள்ளனர்.

1.2). 17.08.1959 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தில் நஞ்சப்பகவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட மேற்கண்ட சொத்துக்களை வாதி வாங்கியுள்ளார். நஞ்சப்பகவுண்டர், தனது வாழ்நாளில், 08.03.1967 தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் மூலம், சொத்துக்களின் ஒரு பகுதியை பழனிகவுண்டர், மாரப்பகவுண்டர் மற்றும் கருப்பனகவுண்டர் ஆகிய மூன்று நபர்களுக்கு விற்றுவிட்டார். வாதி 12.06.2002 தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் மூலம், மேற்கூறிய மூன்று நபர்களிடமிருந்து மேற்கண்ட சொத்தை வாங்கினார். மேற்கூறிய மூன்று நபர்களும், தங்களுக்கு உரிமையானதை விட அதிக அளவில் சொத்துக்களை விற்றனர். வாதி அதிக அளவை வாங்கியிருந்தபோதிலும், நஞ்சப்பகவுண்டர் மற்றும் அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகளின் அனுபவத்திற்கேற்ப, அவர் சரியான அளவிலான சொத்துக்களை உடைமையிலும் அனுபவத்திலும் கொண்டுள்ளார்.

1.3). மேலும், மேற்கூறிய உண்மை நிலவரங்களின் அடிப்படையில், சொத்துக்களுக்கான உரிமை மற்றும் உடைமையைக் கண்டறிவதற்காகவும், பொதுக் கிணறு, பொது வண்டிப் பாதை போன்றவற்றை அனுபவிப்பது தொடர்பாக தரப்பினரிடையே உள்ள உண்மையான பிரச்சினையை கண்டறிவதற்காகவும் இறந்துபோன நஞ்சப்பகவுண்டரின் சட்டப்பூர்வ வாரிசுகளும், மேலே குறிப்பிடப்பட்ட பழனிகவுண்டர், மாரப்பகவுண்டர் மற்றும் கருப்பனகவுண்டர் ஆகியவர்களும் வழக்கிற்கு தகுந்த மற்றும் அவசியமான தரப்பினர் ஆவார்கள். பொதுக் கிணறு, பொது வண்டிப் பாதை மற்றும் அந்தந்த சொத்துக்கள் மீதான அனுபவிக்கும் முறை மற்றும் உடைமையை வெளிப்படுத்த அவர்கள் தகுதி வாய்ந்த நபர்கள் ஆவார்கள். எனவே,

மனுதாரர்கள் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். மேலும், முன்மொழியப்பட்ட தரப்பினரின் எதிர்வழக்குரை மற்றும் அவர்களின் வாய்மொழி மற்றும் ஆவணச் சான்றுகள், தரப்பினருக்கு இடையேயான உண்மையான பிரச்சினை குறித்து தீர்வுக்காண வழிவகுக்கும். மேலும், இது தரப்பினருக்கு இடையேயான வழக்கை முடிவுக்குக் கொண்டுவர நீதிமன்றத்திற்கு உதவியாக இருக்கும். இந்த வழக்கில் முன்மொழியப்பட்ட தரப்பினரை 9 முதல் 20 வரையிலான பிரதிவாதிகளாகச் சேர்க்க நீதிமன்றம் அனுமதி வழங்கப்படாவிட்டால், மனுதாரர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாவார்கள். மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**2). 1ம் திர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**

2.1). மனு பொய்யானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் ஏற்றுக்கொண்ட சங்கதிகளையும் இதர சங்கதிகளையும் மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள். வழக்கின் பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்ட ஆவணங்கள் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கோரியும், தாவா "ஏ" செட்யூல் சொத்துக்களை வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை கடந்த 11.07.2017ம் தேதியில் தொந்தரவு செய்ததால் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மட்டுமே தாவா தாக்கல் செய்துள்ளார். தாவா "ஏ" செட்யூல் சொத்துக்களை பொறுத்து விளம்புகை பரிகாரம் எதுவும் எதிர்மனுதாரர்/வாதி அசல் வழக்கில் கோரவில்லை.

2.2). முன் உரிமை ஆவணங்களின் படியும், நீண்ட நெடுநாளைய அனுபவத்தின் படியும், இந்த எதிர்மனுதாரர் "ஏ" செட்யூல் சொத்துக்களினை கடந்த 14.09.2000 மற்றும் 12.06.2002ம் தேதிகளில் நஞ்சப்பகவுண்டர் வகையறாவிடம் இருந்து கிரையம் பெற்றார் என்பது உண்மை. கடந்த 14.09.2000 மற்றும் 12.06.2002-ன் படியான சொத்துக்கள் யாவும் இந்த எதிர்மனுதாரரின் அனுபவத்தில் உள்ளது. மேற்படி கிரைய ஆவண தரப்பினர்களை இந்த வழக்கின் அவசிய தரப்பினர்களாக சேர்த்திடக்கோரி தாக்கல் செய்த இம்மனு நிலைக்கத்தக்கதல்ல.

2.3). 'ஏ' செட்யூல் சொத்துக்களை வழக்கின் பிரதிவாதிகள் மோசடி ஆவணங்கள் ஏற்ப்படுத்திக்கொண்டு இடையூறு செய்ததால் அவர்கள் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்ட நிலையில் இந்த எதிர்மனுதாரரின் முன் உரிமையாளர்கள் அசல் வழக்கு எழுவினா பிரச்சனை தீர்ப்பதற்கான அவசிய தரப்பினர்கள் என்பது முற்றிலும் தவறாகும். இந்த எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள வழக்கில் இந்த 9 முதல் 19ம் எதிர்மனுதாரர்களினை பொறுத்து எவ்விதமான பரிகாரமும் கோராத நிலையில் அவர்களினை தரப்பினர்களாக சேர்த்திடக்கோரி இந்த எதிர்மனுதாரரினை கட்டாயப்படுத்த இயலாது.

2.4). வழக்கின் முழு விபரங்களை மறைத்தும், வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்திட பொய்யான மனுவினை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு சொத்துகளில் உரிமை உள்ளதாக கூறும் மனுதாரர்கள் தேவைப்படின் தாம் கோரும் நிவாரணத்திற்கு தனியாக வழக்கு தாக்கல் செய்யாமல் இந்த வழக்கில் 9 முதல் 19ம் எதிர்மனுதாரர்களை தாவாவில் தரப்பினராக சேர்த்திடக்கோரும் மனு நிலைக்கத்தக்கதல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது யாதெனில்? இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.**

4. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5. மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு பி.சா.1 குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள்/ 1

மற்றும் 2 பிரதிவாதிகள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

5.1). மனுதாரர்கள் தரப்பில், 1ம் எதிர்மனுதாரர்/வாதி காலஞ்சென்ற நஞ்சப்பகவுண்டரின் சட்டப்பூர்வ வாரிசுகளிடமிருந்து, மனுவில் பட்டியலிடப்பட்டுள்ள 14.09.2000 தேதியிட்ட இரண்டு விற்பனைப் பத்திரங்களின் மூலம் வழக்குச் சொத்தின் ஒரு பகுதியை வாங்கியுள்ளார். மேற்கூறிய சட்டப்பூர்வ வாரிசுகள், தங்களுக்கு உரிமையானதை விட அதிக அளவில் சொத்துக்களை வேண்டுமென்றே விற்றுள்ளனர். சொத்துக்களுக்கான உரிமை மற்றும் உடைமையைக் கண்டறிவதற்காகவும், பொதுக் கிணறு, பொது வண்டிப் பாதை போன்றவற்றை அனுபவிப்பது தொடர்பாக தரப்பினரிடையே உள்ள உண்மையான பிரச்சினையை கண்டறிவதற்காகவும் இறந்துபோன நஞ்சப்பகவுண்டரின் சட்டப்பூர்வ வாரிசுகளும், பழனிகவுண்டர், மாரப்பகவுண்டர் மற்றும் கருப்பனகவுண்டர் ஆகியவர்களும் வழக்கிற்கு தகுந்த மற்றும் அவசியமான தரப்பினர் ஆவார்கள் என சொல்லப்பட்டுள்ளது.

5.2). 1ம் எதிர்மனுதாரர் தரப்பில், முன் உரிமை ஆவணங்களின் படியும், நீண்ட நெடுநாளைய அனுபவத்தின் படியும், இந்த எதிர்மனுதாரர் "ஏ" செட்யூல் சொத்துக்களினை கடந்த 14.09.2000 மற்றும் 12.06.2002ம் தேதிகளில் நஞ்சப்பகவுண்டர் வகையறாவிடம் இருந்து கிரையம் பெற்றார் என்பது உண்மை. கடந்த 14.09.2000 மற்றும் 12.06.2002-ன் படியான சொத்துக்கள் யாவும் இந்த எதிர்மனுதாரரின் அனுபவத்தில் உள்ளது. மேற்படி கிரைய ஆவண தரப்பினர்களை இந்த வழக்கின் அவசிய தரப்பினர்களாக சேர்த்திடக்கோரி தாக்கல் செய்த இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என ஆட்சேபணை சொல்லியுள்ளார்.

5.3). மனுதாரர் தரப்பில், 17.08.1959 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தில் நஞ்சப்பகவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட மேற்கண்ட சொத்துக்களை வாதி வாங்கியுள்ளார். நஞ்சப்பகவுண்டர், தனது வாழ்நாளில், 08.03.1967 தேதியிட்ட கிரையப்

பத்திரத்தின் மூலம், சொத்துக்களின் ஒரு பகுதியை பழனிகவுண்டர், மாரப்பகவுண்டர் மற்றும் கருப்பனகவுண்டர் ஆகிய மூன்று நபர்களுக்கு விற்றுவிட்டார். வாதி 12.06.2002 தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் மூலம், மேற்கூறிய மூன்று நபர்களிடமிருந்து மேற்கண்ட சொத்தை வாங்கினார். மேற்கூறிய மூன்று நபர்களும், தங்களுக்கு உரிமையானதை விட அதிக அளவில் சொத்துக்களை விற்றனர் என சொல்லப்பட்டுள்ளது.

5.4). எனவே மேற்படி மூன்று நபர்களும் தங்களுக்கு உரிமையானதைவிட அதிக அளவில் சொத்துக்களை விற்றுள்ளனர் என்பதையும், வாதி அதிக அளவில் சொத்துக்களை வாங்கியுள்ளார் என்பதையும் தீர்மானிக்க வேண்டும். வழக்கு சொத்தின் விஸ்தீர்ணம் மற்றும் எல்லைகளை நிர்ணயம் செய்ய வேண்டியது அவசியமாகும். அப்போது தான் அசல் வழக்கில் வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதை பரிசீலனை செய்ய இயலும்.

5.5). முன் உரிமை ஆவணங்களின் படியும், நீண்ட நெடுநாளைய அனுபவத்தின் படியும், இந்த எதிர்மனுதாரர் "ஏ" செட்யூல் சொத்துக்களை கடந்த 14.09.2000 மற்றும் 12.06.2002ம் தேதிகளில் நஞ்சப்பகவுண்டர் வகையறாவிடம் இருந்து 1ம் எதிர்மனுதாரர்/வாதி கிரையம் பெற்றார் என சொல்லியுள்ள நிலையில் வழக்கு சொத்து சம்மந்தமான பிரச்சினை குறித்து முழுமையான தீர்வு காண, வழக்கு சொத்து சம்ந்தமான முன்கிரைய ஆவண தரப்பினர்களை இந்த வழக்கின் அவசிய தரப்பினர்களாக சேர்க்க வேண்டடியது அவசியம் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. 8 முதல் 19 எதிர்மனுதாரர்களை 9 முதல் 20 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே நீதியின் நலன் கருதி இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Draft/Fair order
IA.No.13/2025 in
OS.128/2018 in
Dated:.26.03.2026
DMC, Sulur.